

புதுச்சேரி அரசு

# தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## புதுச்சேரி

தமிழ்த் துறை நிகழ்த்தும்

தேசியக் கருத்தரங்கம்

# பொருண்மை : பன்முக நோக்கில் திருக்குறள்

நாள் : 04-05-2023, வியாழன் காலை 10.00 மணி    இடம் : சுப்பிரமணிய பாரதியார் கருத்தரங்கக் கூடம்

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| தமிழ்த் தாய் வாழ்த்து | : | முனைவர் **இரா. அகிலா**<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை |
| வரவேற்புரை | : | முனைவர் **க. ரேவதி**<br>தமிழ்த் துறைத் தலைவர் |
| நோக்க உரை | : | முனைவர் **தி. தாமரைச் செல்வி**<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை |
| தலைமை உரை | : | முனைவர் **சசிகாந்த தாஸ்**<br>கல்லூரி முதல்வர் தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி. |
| வாழ்த்துரை | : | தமிழ்க் காவலர் **வீர. பாலகிருட்டிணன்**<br>மேனாள் காவல் துறைக் கண்காணிப்பாளர், புதுச்சேரி. |
| சிறப்புரை | : | கலைமாமணி முனைவர் **ந. சரோஜா பாபு**<br>தலைவர், உலகத் திருக்குறள் மையம், புதுச்சேரி. |
| பொருண்மை | : | **திருக்குறள் ஒரு வாழ்வியல் திறவுகோல்** |
| சிறப்புரை | : | கலைமாமணி முனைவர் **நா. இளங்கோ**<br>மேனாள் முதல்வர், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி. |
| பொருண்மை | : | **திருக்குறளில் மெய்ப்பாடு** |
| சிறப்புரை | : | கலைமாமணி முனைவர் **அவ்வை. நிர்மலா**<br>மேனாள் தமிழ்த் துறைத் தலைவர், காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி. |
| பொருண்மை | : | **திருக்குறளில் மென்திறன்கள்** |
| நன்றி உரை | : | முனைவர் **பா. சரணாதேவி**<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை |
| நிகழ்ச்சித் தொகுப்பு | : | முனைவர் **க. கண்ணன்**<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை |

**அனைவரும் வருக! தமிழமுதம் பருக!**

# புதுச்சேரி அரசு

## தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதுச்சேரி

## தமிழ்த் துறை நடத்தும் பன்முக நோக்கில் திருக்குறள் தேசியக் கருத்தரங்கம்

புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த் துறையின் சார்பில் 04.05.2023 வியாழன் காலை 10.00 மணி அளவில் சுப்பிரமணிய பாரதியார் கருத்தரங்கக் கூடத்தில் பன்முக நோக்கில் திருக்குறள் எனும் பொருண்மையிலான தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.அகிலா தமிழ்த் தாய் வாழ்த்து இசைத்தார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. ரேவதி வரவேற்புரை வழங்கினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தி. தாமரைச்செல்வி கருத்தரங்கத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் சசிதாந்ததாஸ் தலைமை உரை வழங்கினார். அவர்தம் தலைமை உரையில் திருக்குறள் உலகப் பொதுமறையாக விளங்குகிறது. திருக்குறளைப் போல உலகில் எம்மொழியிலும் நூல்கள் இல்லை. அதுமட்டுமின்றி திருக்குறள் உலகத்தில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எல்லாப் பொருளும் இதன் பால் உள. இதன் பால் இல்லாத எப்பொருளும் உலகில் இல்லை என திருக்குறளின் சிறப்புகள் பலவற்றை எடுத்துரைத்தார்.

புதுச்சேரி மேனாள் காவல்துறைக் கண்காணிப்பாளர் தமிழ்க் காவலர் வீர. பாலகிருட்டிணன் வாழ்த்துரை வழங்கினார்

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் சிறப்புரையாற்றினர்.

புதுச்சேரி உலகத் திருக்குறள் மையத்தின் தலைவர் கலைமாமணி முனைவர் ந.சரோஜா பாபு “திருக்குறள் ஒரு வாழ்வியல் திறவுகோல்“ எனும் பொருண்மையிலும் தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேனாள் முதல்வர் கலைமாமணி முனைவர் நா.இளங்கோ “திருக்குறளில் மெய்ப்பாடுகள்“ எனும்பொருண்மையிலும் காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் கலைமாமணி முனைவர் அவ்வை. நிர்மலா “திருக்குறளில் மென் திறன்கள்“ எனும் பொருண்மையிலும் சிறப்புரை நிகழ்த்தினர்.

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பா. சரளாதேவி நன்றி உரை வழங்கினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் க. கண்ணன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் பேராசிரியர்களும் தமிழ்த்துறை மாணவர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.















புதுச்சேரி
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தமிழ்த்துறை
தமிழ்ஒளி ஆய்வாளர்கள் கிளை
முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்
இணைந்து நடத்தும்
ஆய்வரங்கம்
கவிஞர் தமிழ்ஒளி படைப்புகளில் சமூகப் பார்வை
நாள்: 24.02.2023, வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: கலையரங்கம், கல்லூரி வளாகம், புதுச்சேரி
வர்வேற்புரை: முனைவர் ஆ.விஜயராணி, தமிழ்த்துறை
தொடக்கவுரை: முனைவர் சசிகாந்த தாஸ், கல்லூரி முதல்வர்
தலைமையுரை: முனைவர் வே.கருணாநிதி, துறைத்தலைவர்
வாழ்த்துரை: திரு. வீர.அரிகிருஷ்ணன், மாநிலக்குழு, தமுஎகச
ஆய்வுரைகள்
திருமதி ப.ரேவதி, ஆய்வாளர்
"கவிஞர் தமிழ்ஒளி கவிதைகளில் சமூகப் பகுப்பாய்வு"
திரு. பிரின்ஸ் கஜேந்திரபாபு
"மக்கள் படைப்பாளியாகக் கவிஞர் தமிழ்ஒளி"
முனைவர் நா.இளங்கோ
"தமிழ்ஒளி படைப்புகளில் விளிம்புநிலை மக்கள்"
ஒருங்கிணைப்பு: முனைவர் க.கண்ணன், தமிழ்த்துறை
நன்றியுரை: திரு. பிரபாகர் ஜெயப்பிரகாஷ், தமிழ்ஒளி கிளை
அனைவரும் வருக...


**புதுச்சேரி அரசு**

## தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி-08
## தமிழ்த்துறை மற்றும் தமிழ் ஒளி ஆய்வாளர்கள் கிளை
## முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்
## இணைந்து நடத்தும்
## கவிஞர் தமிழ் ஒளி படைப்புகளில் சமூகப் பார்வை ஆய்வரங்கம்

புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையின் சார்பில் 24.02.2023 வெள்ளிக்கிழமை 10.00 மணி அளவில் சுப்பிரமணிய பாரதியார் கருத்தரங்கக் கூடத்தில் கவிஞர் தமிழ் ஒளி படைப்புகளில் சமூகப்பார்வை எனும் பொருண்மையில் ஆய்வரங்கம் நடைபெற்றது.

இவ்விழாவில் முனைவர் இரா. அகிலா அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

முனைவர் ஆ. விஜயராணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சசிகாந்ததாஸ் அவர்கள் தொடக்கவுரை வழங்கி விழாவைச் சிறப்பித்தார்.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வே. கருணாநிதி அவர்கள் தலைமையுரை வழங்கினார். இந்நிகழ்வில் தமுஎகச மாநிலக்குழு உறுப்பினர் வீர. அரிக்கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் ஆய்வாளர் ப. ரேவதி “ கவிஞர் தமிழ் ஒளி கவிதைகளில் சமூகப் பகுப்பாய்வு ” எனும் பொருண்மையிலும், திரு. பிரின்ஸ் கஜேந்திரபாபு “ மக்கள் படைப்பாளியாகக் கவிஞர் தமிழ் ஒளி ” எனும் பொருண்மையிலும், முனைவர் நா. இளங்கோ “ தமிழ் ஒளி படைப்புகளில் விளிம்பு நிலை மக்கள் ” எனும் பொருண்மையிலும் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

தமிழ்ப் பேரவைத் தொடக்கவிழாவின் நிறைவாக நன்றியுரையைப் பேராசிரியர் இரா. கோவலன் அவர்கள் வழங்கினார். இவ்விழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் கலந்துக்கொண்டனர். நாட்டுப்பண்ணோடு விழா இனிதே நிறைவுற்றது.

**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க. கண்ணன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கினார். தமிழ் ஒளி கிளை திரு. பிரபாகர் ஜெயப்பிரகாஷ் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் பேராசிரியர்களும் தமிழ்த்துறை மாணவர்களும் திரளாகக் கலந்துக் கொண்டனர்.**

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி
தமிழ் ஒளி ஆய்வரங்கம்
திசம்பர் - 2023











புதுச்சேரி அரசு

## தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி

## தமிழ்த்துறை

## சிறப்புக் கருத்தரங்கம்

நாள் : 22-10-2018 இடம் : கருத்தரங்கக் கூடம்

நேரம் : காலை 10.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| வரவேற்புரை : | முனைவர் வா. வினோத்<br>துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை |
| தலைமையுரை : | முனைவர் வே. கருணாநிதி<br>இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர் |
| தொடக்கவுரை : | முனைவர் நா. இளங்கோ<br>முதல்வர்<br>தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி |
| சிறப்புரை : | முனைவர் மு. ரமேஷ்<br>துணைப் பேராசிரியர்<br>அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம்<br>சென்னை |
| **தலைப்பு :** | **திணைக் கோட்பாடும்<br>புறப்பொருள் வெண்பாமாலையும்** |
| நன்றியுரை : | அ. இர்பானுல்லா<br>இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு |

அனைவரும் வருக தமிழ் அமுதம் பருக

புதுச்சேரி அரசு

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி-08

தமிழ்த்துறை

நிகழ்த்தும்

சிறப்புக் கருத்தரங்கம்

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையில் 22.10.2018 அன்று காலை 10 மணிக்கு கருத்தரங்கக் கூடத்தில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் வா. வினோத் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வே. கருணாநிதி தலைமையுரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் நா. இளங்கோ கருத்தரங்கத்திற்கான தொடக்க உரை வழங்கினார்.

சென்னை அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியின் துணைப் பேராசிரியர் முனைவர் மு. ரமேஷ் "திணைக்கோட்பாடும் புறப்பொருள் வெண்பா மாலையும்" எனும் பொருண்மையில் சிறப்புரை ஆற்றினார். நிறைவாக தமிழ்த்துறை மாணவர் இர்பானுல்லா நன்றியுரை வழங்கினார். இக்கருத்தரங்கில் பேராசிரியர்களும் மாணவர்களும் திரளாகக் கலந்துக் கொண்டனர்.









Government of Puducherry

**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**புதுச்சேரி**

**தமிழ்த் துறை**

**நிகழ்த்தும்**

**"புதுச்சேரி மாநில வரலாறு பழமையும் புதுமையும்"**

ஒரு நாள் கருத்தரங்கம்

நாள்: 22.02.2019 இடம்: தமிழ்த் துறை

நேரம்: காலை 10 மணி

பேரன்புடையீர்!

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையில் வரும் 22.02.2019 காலை 10.00 மணிக்கு "புதுச்சேரி மாநில வரலாறு பழமையும் புதுமையும்" எனும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. பேராசிரியர்களும் மாணவர்களும் தவறாது கலந்து கொண்டு சிறப்புச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அன்புடன்

தமிழ்த்துறையினர்

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

புதுச்சேரி

## நிகழ்ச்சி நிரல்

**தமிழ்த் தாய் வாழ்த்து:** முனைவர் இரா. அகிலா
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

**வரவேற்புரை:** முனைவர் வே. கருணாநிதி
தமிழ்த் துறைப் பேராசிரியர்

**நோக்கவுரை:** முனைவர் தி. தாமரைச்செல்வி
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

**தலைமையுரை:** முனைவர் நா. இளங்கோ
முதல்வர், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

**1. பொருள் உரை :** பேராசிரியர் பெஞ்சமின் லெபோ
தலைவர், பிரான்ஸ் வொரொயால்
தமிழ்க் கலாச்சார மன்றம்
**பொருள் :** "*புதுவை தொல்லியல் வரலாறும் ஆய்வுகளும்*"

**2. பொருள் உரை:** திரு. நா. இராசசெல்வம்
தலைவர், புதுச்சேரி வரலாற்றுச் சங்கம்
**பொருள்:** "*சங்க காலமும் புதுச்சேரியும்*"

**3. பொருள் உரை:** முனைவர் க. ரேவதி
தமிழ்த் துறைப் பேராசிரியர்
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
**பொருள் :** "*புதுச்சேரி மக்கள் பண்பாட்டில் ஆடைகளும் ஆபரணங்களும்*"

**4. பொருள் உரை:** முனைவர் ப. பத்மநாபன்
மேனாள் விளம்பரத்துறை இயக்குநர், புதுச்சேரி.
**பொருள்:** "*பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி*"

**நன்றியுரை:** திருமதி பா. சரளாதேவி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

**நிகழ்ச்சித் தொகுப்பு:** திரு. இரா. கோவலன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

**புதுச்சேரி அரசு**
**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி-08**
**தமிழ்த் துறை**

**நிகழ்த்தும்**

**“புதுச்சேரி மாநில வரலாறு பழமையும் புதுமையும்”**
**ஒரு நாள் கருத்தரங்கம்**

புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையில் 22.02.2019 அன்று காலை 10.00 மணிக்கு “புதுச்சேரி மாநில வரலாறு பழமையும் புதுமையும்” எனும் தலைப்பிலான ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

முனைவர் இரா. அகிலா தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் வே. கருணாநிதி வரவேற்புரை வழங்கினார். தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் நா. இளங்கோ தலைமையுரை ஆற்றினார். தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் தி. தாமரைச்செல்வி நோக்கவுரை ஆற்றினார்.

கருத்தரங்கில் பிரான்ஸ் வொரொயால் தமிழ்க் கலாச்சார மன்றத்தின் தலைவர் பேராசிரியர் பெஞ்சமின் லெபோ “ புதுவைத் தொல்லியல் வரலாறும் ஆய்வுகளும்” எனும் பொருண்மையிலும், புதுச்சேரி வரலாற்றுச் சங்கத்தின் தலைவர் நா. இராசசெல்வம் “சங்ககாலமும் புதுச்சேரியும்” எனும் பொருண்மையிலும் தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் க. ரேவதி “புதுச்சேரி மக்கள் பண்பாட்டில் ஆடைகளும் ஆபரணங்களும்” எனும் பொருண்மையிலும், புதுச்சேரி விளம்பரத் துறையின் மேனாள் இயக்குநர் முனைவர் ப. பத்மநாபன் “பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி” எனும் பொருண்மையிலும் கருத்துரை வழங்கினர்.

நிறைவாக நன்றியுரையைத் தமிழ்த் துறைப் பேராசிரியர் பா. சரளாதேவி வழங்கினார். தமிழ்த் துறை பேராசிரியர் திரு. இரா. கோவலன் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இவ்விழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் திரளாகக் கலந்துக்கொண்டனர். நாட்டுப்பண்ணோடு விழா இனிதே நிறைவுற்றது.









**புதுச்சேரி அரசு**

**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி-08**

**கணினித்தமிழ்ப் பேரவை**

**சென்னை, தமிழ் இணைய கல்விக்கழகம்**

**இணைந்து நடத்தும்**

**“கணினியும் தமிழும்”**

**ஒரு நாள் தேசியக் கருத்தரங்கம்**

புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையின் சார்பில் 27.02.2020 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் கருத்தரங்கக் கூடத்தில் தொடக்கவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்த் துறை மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் வேல். கார்த்திகேயன் வரவேற்புரை வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் நா. இளங்கோ தலைமையுரை வழங்கினார். தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சசிகாந்ததாஸ் முன்னிலை உரை வழங்கி விழாவைச் சிறப்பித்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் தெய்வ சுந்தரம் நயினார் கருத்தரங்கம் குறித்த மையப்பேருரை வழங்கினார். “கணினியும் தமிழும்” எனும் தலைப்பிலான கருத்தரங்கில் மூன்று அமர்வுகள் நடைபெற்றது.

தேசியக் கருத்தரங்கத்தின் நிறைவு விழாவில் தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர் வே. கருணாநிதி தலைமையுரை ஆற்றினார். கணிப்பொறி அறிவியல் துறையின் தலைவர் முனைவர் சு. முருகன்

முன்னிலை உரை ஆற்றினார். புதுச்சேரி பல்கலைக்கழகம் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலத்தின் பேராசிரியர் முனைவர் ஆ. திருநாகலிங்கம் கருத்தரங்கத்திற்கான நிறைவு விழாப் பேருரையும், சான்றிதழும் வழங்கினார்.

நிறைவாக, தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் கு. ஞானகுரு நன்றியுரை வழங்கினார். நாட்டுப்பண்ணோடு விழா இனிதே நிறைவுற்றது.

இந்நிகழ்வில் பேராசிரியர்களும் தமிழ்த்துறை மாணவர்களும் திரளாகக் கலந்துக் கொண்டனர்.








■ லாஸ்பேட்டை தாகூர் அரசு கலை கல்லூரியில் கணினித் தமிழ் பேரவை, சென்னை தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பில், 'கணினியும் தமிழும்' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் நடந்தது.

# தாகூர் கலைக் கல்லூரியில் கணினித் தமிழ் கருத்தரங்கம்

புதுச்சேரி, பிப். 28–

லாஸ்பேட்டை தாகூர் அரசு கலை கல்லூரியில் கணினித் தமிழ் பேரவை, சென்னைதமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பில், 'கணினியும் தமிழும்' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் நடந்தது.

கருத்தரங்க ஒருங்கி ணைப்பாளர் கார்த்திகே யன் வரவேற்றார். தமிழ்த் துறை தலைவர் இளங்கோ தலைமை தாங்கி, இணைய தமிழின் சிறப்பு கள் குறித்து பேசினார். கல்லூரி முதல்வர் சசி காந்தாஸ் முன்னிலை வகித்தார்.

சென்னை பல்கலைக்க ழக ஓய்வு பெற்ற தமிழ்பே ராசிரியர் தெய்வசுந்தரம் நயினார், கணினித்தமிழின் மேம்பாடு, மென்பொருள் உருவாக்கும் முறை குறித்து கலந்துரையாடினார்.

புதுச்சேரி மற்றும் தமி ழக அளவில் பேராசிரியர் கள் சமர்ப்பித்த கணினித் தமிழ் குறித்த 29 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து, மூன்று அமர் வுகளாக கருத்தரங்கம் நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழக சுப்பிரமணிய பாரதி யார் தமிழியற்புல பேரா சிரியர் திருநாகலிங்கம், மாணவர்களுக்கு சான்றி தழ் வழங்கினார்.

தமிழ்த்துறை இணை பேராசிரியர் கருணாநிதி, கணிப்பொறி அறிவியல் துறை பேராசிரியர் முருகன், காஞ்சிமாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறு வனம், பாரதிதாசன் கல் லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் ஞானகுரு நன்றி கூறினார்.

செய்து விசாரணை நடத்தி வருகின்றார்.

# தாகூர் கலைக்கல்லூரியில் கணினி தமிழ் கருத்தரங்கம்



▶ புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி தமிழ் பேரவை சார்பில் நடந்த கருத்தரங்கில் ‘கணினியும் தமிழும்’ எனும் நூல் வெளியிடப்பட்டது.

**புதுச்சேரி, பிப். 28:** புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி தமிழ் பேரவை மற்றும் சென்னை தமிழ் இணைய கல்வி கழகம் சார்பில் கணினியும் தமிழும் எனும் தலைப்பில் ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் நேற்று நடந்தது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் வேல்.கார்த்திகேயன் வரவேற்றார். தமிழ்த்துறை தலைவர் இளங்கோ தலைமை தாங்கி, இணைய தமிழின் சிறப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்து பேசினார். கல்லூரி முதல்வர் சசிகாந்த தாஸ் முன்னிலை வகித்து இணைய தமிழின் பயன்பாடு குறித்து பேசினார்.

ஓய்வு பெற்ற சென்னை பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர் தெய்வசுந்தரம் நயினார் கணினி தமிழின் மேம்பாடு, மென்பொருள் உருவாக்க முறை குறித்து பேசினார். தொடர்ந்து, புதுச்சேரி மற்றும் தமிழக அளவில் பேராசிரியர்கள் வழங்கிய கணினி தமிழ் குறித்த ஆய்வு கட்டுரைகளை தொகுத்து, கணினியும் தமிழும் எனும் நூல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து, மூன்று அமர்வுகளாக கருத்தரங்கம் நடந்தது. இதில் ஆய்வு கட்டுரை வழங்கிய பேராசிரியர்கள் கருத்துரை வழங்கினர். இதன் நிறைவு விழாவில் பேராசிரியர் கருணாநிதி தலைமை தாங்கினார். புதுவை பல்கலைக்கழக பேராசிரியர் திருநாகலிங்கம் நிறைவுரை ஆற்றி, மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை தமிழ்த் துறை பேராசிரியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர். பேராசிரியர் ஞானகுரு நன்றி கூறினார்.